[1981 பிப்ரவரி 4

அடையாற்றுக்குத் தடுப்புச் சுவர்

* வினா எண். 177—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சைதாப்பேட்டையிலுள்ள அடையாற்றின் கரையோரமாக தடுப்புச் சுவர் அமைத்து நிரந்தர நிவாரணம் அளிக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆம்.

திரு. து. புருஷோத்தமன் : சைதாப்பேட்டையிலுள்ள அடையாறு கரையோரப் பகுதிகள் வெள்ளம் காரணமாக நிரந்தரமாகப் பாதிக்கப்படாமல் இருக்க திட்டமுள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும் ? அடுத்த மழை வருவதற்குமுன் ஆரம்பிக்கப்படுமா ? வெள்ளம் காரணமாக அதிகமான நிவாரணப் பணிகளை அரசும் மாநகராட்சியும் செய்ய அதிமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக இந்தத் தடுப்புச் சுவர் பணி ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த வெள்ளச் சேத தடுப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டம் மிக முக்கியமாக கோட்டூர்புரம் பகுதியில் அந்தப் பகுதியைச் சுற்றி ஏற்கெனவே கரை அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கரை அமைக்கும் பணி தொடர்கிறது. இரண்டாவது கட்டமாக பரங்கிமலை போரூர் பாலத்திலிருந்து அடையாறு பாலம் வரை அடையாற்றில் இருமருங்கும் வெள்ளத் தடுப்புக் கரைகள் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி 130 இலட்சம் ரூபாய் மதிப்பீடும் செய்குறிப்பும் தலைமைப் பொறியாளரால் (பாசனத்துறை) அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியாளர் செயற்குறிப்பு மீது எம்.எம்.டி.ஏ. குறிப்புரை கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் கரைகள் அமைக்கிற பணி அடுத்த கட்டமாகத் துவங்கும். மூன்றாவது கட்டமாக தடுப்புச் சுவர் அமைக்கும் பணி துவங்கும்.

திரு. து.வ. புருஷோத்தமன்: ஏற்கெனவே சென்ற அரசு பல இடங்களில் அதிகமாகப் பாதிக்கப்படுகிற கோட்டூர்புரம், ஆற்றுச்சேரி, திடீர் நகர் போன்ற பகுதிகளில் ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால் தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணியில் ஈடுபட்டால் நிச்சயமாக வெள்ளத்தால் பாதிக்கப்படுவது குறைவாகயிருக்கும்

1981 பிப்ரவரி 4]

அதனால் அரசுக்கும் மாநகராட்சிக்கும் ஏற்படும் பணச் செலவும் குறையும். ஆகவே உடனடியாக அந்தப் பணி மேற்கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : விரைவில் பணி தொடர்வது பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

குளுகோஸ் தொழிற்சாலைகள்.

* வினா எண். 178—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சின்னசேலம் பகுதியில் குளுக்கோஸ் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

* வினா எண். 179—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் ''குளுக் கோஸ்'' தொழிற்சாலை நிறுவும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. பழனிமுத்து : இந்த குளுக்கோஸ் தொழிற் சாலையை ஆத்தூரில் ஏற்படுத்த வேண்டுமென்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும், தொழில் மைய இயக்குநரும் சிபாரிசு செய்து அனுப்பியுள்ளார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் இடங்களைக் கூடப் பார்த்து கல்பனூரில் ஐந்து ஏக்கர்